திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, புதிதாகத் தொழில்கள் தொடங்குவதற்கு இடம் மற்றும் மற்றத் தேவையான வசதிகளை செய்து கொடுக்கின்ற முறையிலே நாகர்கோவிலில் கோணம், மார்த்தாண்டம் ஆகிய இடங்களிலே இடம் கேட்டு மனுச் செய்தவர்களின் எண்ணிக்கை எவ்வளவு? உதவி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு? புதிதாகத் தொழில் துவங்க அரசு செய்திருக்கிற அறிவிப்பின்படி தொழில் துறையிலே பின் தங்கிய தாலுகாவாக தோவாளை தாலுகாவை அறிவித்திருக்கிறார்கள். அந்தத் தோவாளை தாலுக்காவிலே தொழில்கள் ஆரம்பிப்பதற்காக அதிகாரிகள் எல்லாம் வந்து பார்வையிட்டார்கள். அது எந்த நிலையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : தொழில் செய்வதற்கு எந்தவிதமான இடமும் தற்போது இல்லை. கோணம், மார்த்தாண்டம் ஆகிய இடங்களில் அங்கே இருக்கின்ற தொழில் பேட்டையைப் போல் மீண்டும் ஒரு தொழிற் பேட்டையை துவங்க யாரேனும் முன்வந்தால் அவர்களுக்கு அரசு நிச்சயமாக உதவி செய்யும்.

கோவையில் இயங்கிடும் தமிழ்நாடு பால்பண்ணைக் கருவிகள் கூட்டுறவுத் தொழிலியல் சங்கம்.

(*134—வினா 18510)—திரு. பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவையில் இயங்கும் தமிழ்நாடு பால் பண்ணைக் கருவிகள் கூட்டுறவு தொழிலியல் சங்கம் தற்போது எந்த நிலையில் இயங்கி வருகிறது ?

(ஆ) அதன் 1981—82 ஆம் வருடத்திய இலாபம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : (அ) நட்டத்தில் இயங்கிக் கொண்டு வருகிறது.

(ஆ) நட்டத்தில் இயங்கியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உடுக்குறியிட்ட வினாக்கள், —விடைகள் முடிவுற்றன.